# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2467/69 - 2025 දෙසැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2025.12.19

*2467/69 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பகிரங்க சேவை ஆணைக்குழு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 56(1) ஆம் உறுப்புரை
மற்றும் 57(1) ஆம் உறுப்புரை பிரகாரம் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்

அதிகாரங்களைக் கையளித்தல்

01. (1) அரசியலமைப்பின் 56 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இங்கு "அ" அட்டவணையின், I ஆம் பகுதியின் I ஆம் நிரலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதி / பிரிவு தொடர்பில் அதன் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் கல்விச் சேவைக்குழுவிற்கு இத்தால் கையளிக்கப்படுகின்றன.

(2) கல்விச் சேவைக்குழு என்பதன் மூலம், 1989/27 ஆம் இலக்க மற்றும் 2016.10.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட, 2016.10.20 ஆம் திகதி பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்டுள்ள பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு என கருதப்படும்.

02. (1) அரசியலமைப்பின் 56(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இங்கு "ஆ" அட்டவணையின், I ஆம் பகுதியின் I ஆம் நிரலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதி/பிரிவு தொடர்பில் அதன் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் சுகாதார சேவைக்குழுவிற்கு இத்தால் கையளிக்கப்படுகின்றன.




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documநnts.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(2) சுகாதார சேவைக்குழு என்பதன் மூலம், 1990/25 ஆம் இலக்க மற்றும் 2016.10.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்ட, 2016.11.01 ஆம் திகதி பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் தாபிக்கப்பட்டுள்ள பகிரங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக்குழு கருதப்படும்.

03. அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இங்கு “அ” அட்டவணையின் II ஆம் பகுதியின் I ஆம் நிரலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதி / பிரிவு தொடர்பில் அதன் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், அதன் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களுக்குப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

04. அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இங்கு “ஆ” அட்டவணையின் II ஆம் பகுதியின் I ஆம் நிரலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதி / பிரிவு தொடர்பில் அதன் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், அதன் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

05. அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இங்கு “இ” அட்டவணையின் I ஆம் நிரலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதி / பிரிவு தொடர்பில் அதன் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், அதன் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

06. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் / அல்லது பதவி நீக்கம் தொடர்பில் தத்துவங்கள் கையளிக்கப்பட்டுள்ள “அ” அட்டவணையின் I ஆம் பகுதியில் அல்லது “ஆ” அட்டவணையின் I ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவொன்றின் அங்கத்தவரொருவர் “அ” அட்டவணையின் I ஆம் பகுதியில் அல்லது “ஆ” அட்டவணையின் I ஆம் பகுதியின் I ஆம் நிரலுடன் தொடர்புடைய உத்தியோகத்தர் வகுதியை/ பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பிலான எந்தவொரு முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையின் போதும் மற்றும் / அல்லது ஆரம்பப் புலனாய்வின் போது முறைப்பாட்டாளராகவோ அல்லது சாட்சியாளராகவோ அல்லது பலமுள்ள சாட்சியாளராகவோ இருக்கும் பட்சத்தில், குறித்த குழுவிற்கு அவ்வாறு ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும்/பதவி நீக்கம் தொடர்பில் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அதிகாரங்கள் எதுவும் குறித்த குழுவிற்குக் கையளிக்கப்படவில்லை எனக்கருதி பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் குறித்த அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

07. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் / அல்லது பதவி நீக்கம் தொடர்பில் தத்துவங்கள் கையளிக்கப்பட்டுள்ள “அ” அட்டவணையின் II ஆம் பகுதியில் அல்லது “ஆ” அட்டவணையின் II ஆம் பகுதியில் அல்லது “இ” அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அரச அலுவலர் ஒருவர், “அ” அட்டவணையின் II ஆம் பகுதியில் மற்றும் “ஆ” அட்டவணையின் II பகுதியில் மற்றும் “இ” அட்டவணையின் I ஆம் நிரலுடன் தொடர்புடைய உத்தியோகத்தர் வகுதியை/பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பிலான எந்தவொரு முறைமைசார் ஒழுக்காற்று விசாரணையின் போதும் மற்றும் / அல்லது ஆரம்பப் புலனாய்வின் போது முறைப்பாட்டாளராகவோ அல்லது சாட்சியாளராகவோ அல்லது பலமுள்ள சாட்சியாளராகவோ இருக்கும் பட்சத்தில், அவ் உத்தியோகத்தருக்கு அவ்வாறு ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும்/ அல்லது பதவி நீக்கம் தொடர்பில் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அதிகாரங்கள் எதுவும் குறித்த அரச அலுவலருக்குக் கையளிக்கப்படவில்லை எனக்கருதி பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் குறித்த அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

**நிபந்தனைகள்**

08. இங்கு கையளிக்கப்பட்டுள்ள அனைத்து தத்துவங்களையும் நடைமுறைப்படுத்துகையில் ஏற்புடைய அறிவுறுத்தல்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் பின்வரும் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

(1) (அ) தத்துவங்கள் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரி பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளின் II ஆம் அத்தியாயத்தின் 12, 13, 14, 15, 16, 17, 18, 19, 20, 21 ஆம் பிரிவுகளின் மற்றும் XX ஆம் அத்தியாயத்தின் 288 மற்றும் 289 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும்.

(ஆ) மேற்குறித்த (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளின் ஏற்புடைய பிரிவுகள், இங்கு “ஈ” அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(2) (அ) அரசியலமைப்பின் 55 (5) ஆம் உறுப்புரையில் விதிக்கப்பட்டுள்ளவாறு, ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்தலுக்கு அமைவாகப் பாராளுமன்றத்திற்குத் தனது பொறுப்புக் கூறல்

மற்றும் வகைபொறுப்பை நிறைவேற்றுவதற்கு, எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட நிகழ்வுகளின் மாதிரிக்கு அல்லது குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுக்கு அமைவாக, ஏற்புடைய அதிகாரிகள் இத்தால் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்வதற்காக சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவானது அவ்வப்போது ஏற்புடைய தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிக்க முடியும்.

(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் திட்டவட்டமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரிகள் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகளை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) தத்துவங்கள் கையளிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரியும், பகிரங்க சேவை ஆணைக்குழுவின் எழுத்துமூல முன்னங்கீகாரமின்றி கையளிக்கப்பட்ட தத்துவங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலான எந்தவொரு சட்ட நடவடிக்கையின் போதும் எந்தவொரு தரப்பினருடனும் சமரசத்திற்கு வருதலாகாது.

(4) ஏதேனுமொரு அமைச்சின் செயலாளரினால் பகிரங்க சேவை ஆணைக்குழு மூலம் தத்துவங்கள் கையளிக்கப்படுவதன் பொருட்டு குறித்த அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில், குறித்த மேலதிக செயலாளர் பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் முறைப்படி பதவிக்கு நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

09. அதிகாரக் கையளிப்பானது, இரண்டாயிரத்து இருபத்து ஆறு சனவரி மாதம் முதலாம் திகதி முதல் (இதனகத்துப் பின்னர் 'செயல்வலுப்பெறும் திகதி' எனக் குறிப்பிடப்படும்) நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**நீக்குதல் மற்றும் தக்கவைத்தல்**

10. (அ) குறித்த அதிகாரக் கையளிப்பு நடைமுறைப்படுத்தப்படும் தினத்திலிருந்து பின்வரும் இலக்கங்களைக் கொண்ட மற்றும் திகதிகளிலான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்ட அதிகாரக் கையளிப்புக்களானது குறித்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அதிகாரக் கையளிப்புக்களின் கீழ் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் ஏதேனும் ஒரு நடவடிக்கைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

i. 1941/ 41 ஆம் இலக்க மற்றும் 2015.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
ii. 1955/ 22 ஆம் இலக்க மற்றும் 2016.02.25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
iii. 1989/29 ஆம் இலக்க மற்றும் 2016.10.19 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
iv. 1990/24 ஆம் இலக்க மற்றும் 2016.10.27 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
v. 1992/ 7 ஆம் இலக்க மற்றும் 2016.11.07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
vi. 2004/ 49 ஆம் இலக்க மற்றும் 2017.02.01 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
vii. 2014/ 3 ஆம் இலக்க மற்றும் 2017.04.11 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
viii. 2016/ 37 ஆம் இலக்க மற்றும் 2017.04.26 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
ix. 2043/ 13 ஆம் இலக்க மற்றும் 2017.10.30 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
x. 2074/ 45 ஆம் இலக்க மற்றும் 2018.06.08 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
xi. 2131/ 60 ஆம் இலக்க மற்றும் 2019.07.13 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
xii. 2131/ 61 ஆம் இலக்க மற்றும் 2019.07.13 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
xiii. 2227/ 4 ஆம் இலக்க மற்றும் 2021.05.10 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
xiv. 2248/ 10 ஆம் இலக்க மற்றும் 2021.10.04 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
xv. 2312/ 41 ஆம் இலக்க மற்றும் 2022.12.29 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
xvi. 2365/ 65 ஆம் இலக்க மற்றும் 2024.01.04 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை
xvii. 2373/ 33 ஆம் இலக்க மற்றும் 2024.02.29 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை

(ஆ) மேற்குறித்த (அ) பந்தியில் திட்டவட்டமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல்கள் இரத்துச் செய்யப்பட்ட போதிலும், குறித்த வர்த்தமானி அறிவித்தல்களின் கீழ் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரிகளினால் அல்லது அதிகாரிகளுக்கு எதிராக இந்த வர்த்தமானி அறிவித்தல் செயல்வலுப்பெறும் தினத்தன்று பேணப்படும் சகல

வழக்குத் தொடரல்கள், நடவடிக்கைகள், ஒழுக்காற்று நடைமுறைகள், விடயங்களை இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட அதிகாரக் கையளிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகக் கருதி தொடர்ந்தும் பேணிச் செல்லல் வேண்டும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன,**
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

பகிரங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/ 9, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2025, திசெம்பர் 19 ஆம் திகதி.

**அட்டவணை "அ"**

**கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய சேவைகளின் உத்தியோகத்தர்கள்**
**பகுதி I**

கல்விச் சேவைக் குழு

(இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 56(1) ஆம் உறுப்புரை பிரகாரம் அதிகாரக் கையளிப்பு)

| *I ஆம் நிரல்*<br><br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| 1. பின்வரும் சேவைகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>அ) இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br><br>ஆ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, பின்வரும் உத்தியோகத்தர் வகுதிகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் :<br><br>i. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்;<br>ii. நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்காங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள்<br><br>இ) இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்காங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள்/ ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் உறுதிப்படுத்தல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள்/ ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய தரம் II இற்கு அல்லது தரம் I இற்குப் பதவியுயர்த்தல்<br>vi. தரம் III அல்லது தரம் II பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்குத் தெரிவு முறையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் நியமனம்<br>vii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள்/ ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய தரம் I பதவிக்கு நியமித்தல்<br>viii. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>ix. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>x. அரசாங்க சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| | xi. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>xii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 2. பின்வரும் சேவைகளைச் சேர்ந்த தரம் I இற்குக் குறைந்த தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் தரம் III அல்லது தரம் II பதவிகளை வகிக்கும் தரம் I உத்தியோகத்தர்கள்<br>அ) இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br>ஆ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, பின்வரும் உத்தியோகத்தர் வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் :<br>i. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்;<br>ii. நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள்<br>இ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) |
| 3. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் தரம் I உத்தியோகத்தர்கள் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தல் |
| 4. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் விசேட தர உத்தியோகத்தர்கள் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய பதவிக்கு நியமித்தல் (கல்வி அமைச்சின் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் மேலதிக செயலாளர் பதவி தவிர்ந்த ஏனைய பதவிகள்)<br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 258 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் (258 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) |
| 5. பின்வரும் சேவைகளைச் சேர்ந்த தரம் I பதவிகளை வகிக்கும் தரம் I உத்தியோகத்தர்கள்<br>அ) இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>ஆ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, பின்வரும் உத்தியோகத்தர் வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் : | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 258 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் (258 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) |

| *I ஆம் நிரல்*<br><br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| i. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்;<br>ii. நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள்<br><br>(இ) இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | |
| 6. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கை அதிபர் சேவையில் உள்ளடங்கும் தரம் I உத்தியோகத்தர்கள் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்களுக்கு அமைய தேசிய பாடசாலையொன்றின் அதிபர் பதவிக்கு நியமித்தல்<br>ii. தேசிய பாடசாலையொன்றின் அதிபர் பதவியில் பதிற் கடமை யாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக மாகாண அரசாங்க சேவைக்கு மாற்று சேவை அடிப்படையில் விடுவித்தல் |
| 7. தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல் |
| 8. இலங்கை அதிபர் சேவையில் உள்ளடங்கும் தரம் I உத்தியோகத்தர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>iii. அரசாங்க சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>iv. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>v. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)<br>vi. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 9. இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய தரம் II உத்தியோகத்தர்களை தரம் I இற்குப் பதவியுயர்த்தல் |

| *I ஆம் நிரல்*<br><br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| 10. தற்போது மிகை ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட, இலங்கை அதிபர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>iii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 11. தற்போது மிகை ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட, இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய தரம் II உத்தியோகத்தர்களை மிகை ஊழியர் அடிப்படையில் தரம் I இற்குப் பதவியுயர்த்தல் |
| 12. இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய தரம் II உத்தியோகத்தர்களை தரம் I இற்குப் பதவியுயர்த்தல் |
| 13. இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளடங்கும் ஆசிரியர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல் |
| 14. (அ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/விசேட தர உத்தியோகத்தர்கள்<br><br>(ஆ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/விசேட தர உத்தியோகத்தர்கள் | i. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக பதவியொன்றில் அதிஉயர் தரத்தின்/விசேட தரத்தின் பதிற் கடமையாற்றுவதற்கு நியமித்தல்<br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>iii. அரசாங்க சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>iv. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>v. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)<br>vi. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 15. (அ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட, இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள்/ ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| (ஆ) இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட, இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர்தரத்திற்கு/விசேட தரத்திற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | iii. மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்தின்/விசேட தரத்தின் பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல் |

பகுதி II

(இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரை பிரகாரம் அதிகாரக் கையளிப்பு)

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 01. பின்வரும் சேவைகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>அ) இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>ஆ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, பின்வரும் உத்தியோகத்தர் வகுதிகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் :<br>i. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத் தர்கள்;<br>ii. நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள்<br>இ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய தரம் III அல்லது III/II ஆம் தரங்களைச் சேர்ந்த இணைந்த பதவியொன்றிற்கு நியமித்தல் (நிலவும் வெற்றிடங்களுக்குத் தெரிவு முறையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் தவிர்த்து)<br>iii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>iv. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 2. பின்வரும் சேவைகளைச் சேர்ந்த தரம் I இற்குக் குறைந்த தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் தரம் III அல்லது தரம் II இல் பதவிகளை வகிக்கும் தரம் I உத்தியோகத்தர்கள்<br>அ) இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>ஆ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, பின்வரும் உத்தியோகத்தர் வகுதிகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் :<br>i. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்;<br>ii. நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள்<br>இ) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரை பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 பிரிவுகள் இரண்டும் உள்ளடங்கலாக) ] |
| 3. பின்வரும் சேவைகளில் உள்ளடங்கும் தரம் I இன் பதவிகளை வகிக்கும் தரம் I உத்தியோகத்தர்கள்<br>அ) இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>ஆ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, பின்வரும் உத்தியோகத்தர் வகுதிகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள் : | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [258 தொடக்கம் 266 வரை பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (258 மற்றும் 266 பிரிவுகள் இரண்டும் உள்ளடங்கலாக) ] |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| i. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்;<br><br>ii. நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள்<br><br>இ) இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | | |
| 4. இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்ளடங்கும் விசேட தர உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [258 தொடக்கம் 266 வரை பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (258 மற்றும் 266 பிரிவுகள் இரண்டும் உள்ளடங்கலாக) ] |
| 5. இலங்கை அதிபர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல் |
| | | ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய பதவிகளுக்கு நியமித்தல் (தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவிகள் தவிர்த்து)<br><br>iii. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல் (தேசிய பாடசாலைகளின் அதிபர் பதவிகள் தவிர்த்து)<br><br>iv. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br><br>v. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)]<br><br>vi. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 6. இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்குக் குறைந்த தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>iv. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய தரம் III உத்தியோகத்தர்களை தரம் II இற்குப் பதவியுயர்த்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய பதவிகளுக்கு நியமித்தல்<br>vi. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>viii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக மாகாண அரசாங்க சேவைக்கு மாற்றுச்சேவை அடிப்படையில் விடுவித்தல்<br>ix. அரசாங்க சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>x. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>xi. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>xii. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 7. தற்போது மிகை ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட, இலங்கை அதிபர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்கள் (மிகை ஊழியர் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள அதிபர்கள் வகிக்கும் பதவிகளுக்கு இடையில் மாத்திரம்)<br>iv. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 8. தற்போது மிகை ஊழியர் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட, இலங்கை அதிபர் சேவையின் தரம் I இற்குக் குறைந்த தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. சேவையில் நிரந்தரமாக்கல்<br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>iii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய மிகை ஊழியர் அடிப்படையில் தரம் III உத்தியோகத்தர்களை தரம் II இற்குப் பதவியுயர்த்தல்<br>iv. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>v. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் (மிகை ஊழியர் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள அதிபர்கள் வகிக்கும் பதவிகளுக்கு இடையில் மாத்திரம்)<br>vi. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 9. இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>v. அரசாங்க சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>vi. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>viii. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 10. இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளடங்கும் ஆசிரியர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>v. அரசாங்க சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>vi. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறைவிதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| | | vii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | i. சேவையில் நிரந்தரமாக்கல்<br>ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய பதவியுயர்த்தல்<br>iii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்பின் 7.2.6 ஆம் பிரிவுக்கு அமைய தரமொன்றிற்கு நியமித்தல்<br>iv. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>v. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |
| 11. (அ) கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/விசேட தர உத்தியோகத்தர்கள்<br><br>(ஆ) இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/விசேட தர உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)]<br>iii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழ் ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 12. கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (இணைப்பு II) இல் பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | கல்வி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்/ ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் உறுதிப்படுத்தல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்/ ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் (மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தல் தவிர்த்து)<br>vi. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>vii. அரசாங்க சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>viii. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>ix. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>x. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 13. இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அல்லது கல்வி வெளியீட்டு திணைக் களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய திணைக்களத் தலைவர்கள் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள்/ ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் உறுதிப்படுத்தல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள்/ ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவி உயர்த்தல் (மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தல் தவிர்த்து)<br>vi. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>vii. அரசாங்க சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>viii. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>ix. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல<br>x. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |

**அட்டவணை "ஆ"**

**சுகாதாரம்/ஆயுர்வேத எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய சேவைகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்**

**பகுதி I**

**சுகாதார சேவைக்குழு**

**(இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 56(1) ஆம் உறுப்புரை பிரகாரம் அதிகாரக் கையளிப்பு)**

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| 1. பின்வரும் நாடளாவிய சேவைகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை மருத்துவ சேவை<br>(ஆ) இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. இலங்கை மருத்துவ சேவைப் பிரமாணக்குறிப்பு மற்றும் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய தரம் II இற்கான பதவியுயர்வுகள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பதவியுயர்வுகளை மேற்கொள்ளல்<br>vi. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்களுக்கு அமைய மருத்துவ நிர்வாக தரத்தின் பதவிகளுக்கு நியமித்தல் (சுகாதார அமைச்சின் இலங்கை மருத்துவ சேவையில் உள்ளடங்கும் மேலதிக செயலாளர் பதவிகள் தவிர்த்து)<br>vii. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>viii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>ix. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>x. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>xi. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல்<br>xii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| 2. சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் / ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல்<br>vi. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவிக்கு நியமித்தல்<br>vii. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>viii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>ix. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>x. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>xi. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல்<br>xii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 3. சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ்/ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/விசேட தர உத்தியோகத்தர்கள் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவிக்கு நியமித்தல்<br>ii. நிரந்தர பதவிக்கு மேலதிகமாக அதிஉயர் தரத்தின்/விசேட தரத்தின் பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமித்தல்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>iv. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>v. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>vi. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல்<br>vii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல் தவிர்ந்த ஏனைய அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|
| 4. சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் / ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மூலம் அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு மேலதிகமான வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு /விசேட தரத்திற்குப் பதவியுயர்த்தல்<br>iii. மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்தின் /விசேட தரத்தின் பதவிகளில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல் |

**பகுதி II**

**(இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரை பிரகாரம் அதிகாரக் கையளிப்பு)**

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 1. பின்வரும் நாடளாவிய சேவைகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை மருத்துவ சேவை<br>(ஆ)இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | சுகாதாரம் / ஆயுர்வேத எனும் விடயத்திற்குப் பொறுப்பானஅமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்கசேவைஆணைக்குழுசுற்றறிக்கைகளுக்கு அமைய வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய தரம் II இற்குப் பதவியுயர்த்தல்<br>iii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>iv. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 2. சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் / ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, நாடளாவிய சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | சுகாதாரம் / ஆயுர்வேத எனும் விடயத்திற்குப் பொறுப்பானஅமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு அமைய வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>ii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>iii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |
| 3. சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் / ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/விசேட தர உத்தியோகத்தர்கள் | சுகாதாரம் / ஆயுர்வேத எனும் விடயத்திற்குப் பொறுப்பானஅமைச்சரின் அமைச்சரின் செயலாளர் | i. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>ii. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |
| 4. சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழ் வரக்கூடிய (ஆயுர்வேத திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தவிர), இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/ விசேட தரத்திற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | சுகாதாரம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்கசேவைஆணைக்குழுசுற்றறிக்கைகளுக்கு அமைய வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக்குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் (மூன்றாம் மட்ட அதிஉயர் தர/ விசேட தர பதவியுயர்வுகள் தவிர) |

| *I ஆம் நிரல்*<br>*உத்தியோகத்தர் வகுதி/பிரிவு* | *II ஆம் நிரல்*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள்* | *III ஆம் நிரல்*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| | | vi. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>viii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>ix. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>x. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல்<br>xi. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 5. ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட, மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/ விசேட தரத்திற்குக் குறைந்த தரத்திலான உத்தியோகத்தர்கள் | ஆயுர்வேத ஆணையாளர் நாயகம் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்கசேவைஆணைக்குழுசுற்றறிக்கைகளுக்கு அமைய வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் / ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் (மூன்றாம் மட்ட அதிஉயர் தர/ விசேட தர பதவியுயர்வுகள் தவிர)<br>vi. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>viii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>ix. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>x. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல்<br>xi. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |

**அட்டவணை "இ"**

(இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரை பிரகாரம் அதிகாரக் கையளிப்பு)

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. பின்வரும் நாடளாவிய சேவைகளில் உள்ளடங்கும் உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை நிர்வாக சேவை<br>(ஆ) இலங்கை திட்டமிடல் சேவை<br>(இ) இலங்கை கணக்காளர் சேவை<br>(ஈ) இலங்கை பொறியியலாளர் சேவை<br>(உ) இலங்கை விஞ்ஞான சேவை<br>(ஊ) இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | அரச நிர்வாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளின் 127 மற்றும் 128 ஆகிய பிரிவுகளின் கீழ் தகுதிகூர் நிலைக் காலத்தை நீடிப்பதற்கு உட்படும் நிரந்தரமாக்கல்கள் தவிர, சேவையில் நிரந்தரமாக்கல்<br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு அமைய வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>iii. வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டு பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளின் 145 ஆம் பிரிவுக்கு அமைய கடிதங்களை வழங்குதல்<br>iv. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய தரம் II இற்கு அல்லது தரம் I இற்குப் பதவியுயர்த்தல்<br>v. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>vi. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |
| (எ) இலங்கை விவசாய சேவை | விவசாயம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஏ) இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஐ) இலங்கை நில அளவையாளர் சேவை | நில அளவை எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| 2. பின்வரும் நாடளாவிய சேவைகளில் உள்ளடங்கும் தரம் I இற்குக் குறைந்த தரங்களிலான உத்தியோகத்தர்கள் மற்றும் III அல்லது II ஆம் தரங்களைச் சேர்ந்த பதவிகளை வகிக்கும் தரம் I உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை நிர்வாக சேவை<br>(ஆ) இலங்கை திட்டமிடல் சேவை<br>(இ) இலங்கை கணக்காளர் சேவை<br>(ஈ) இலங்கை பொறியியலாளர் சேவை | அரச நிர்வாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய தரம் III பதவிக்கு அல்லது III/II ஆம் தரங்களின் இணைந்த பதவிக்கு நியமித்தல் (நிலவும் வெற்றிடங்களுக்குத் தெரிவு முறையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் தவிர்த்து) |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| (உ) இலங்கை விஞ்ஞான சேவை<br>(ஊ) இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | | ii. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு தரம் III அல்லது தரம் II பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு / கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய பிரிவுகள் இரண்டும் உள்ளடங்கலாக)] |
| (எ) இலங்கை விவசாய சேவை | விவசாயம் எனும் விடயத்திரகு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுப் செயலாளர் | |
| (ஏ) இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஐ) இலங்கை நில அளவையாளர் சேவை | நில அளவை எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| 3. பின்வரும்நாடளாவிய சேவைகளில் உள்ளடங்கும் தரம் I பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை நிர்வாக சேவை<br>(ஆ) இலங்கை திட்டமிடல் சேவை<br>(இ) இலங்கை கணக்காளர் சேவை<br>(ஈ) இலங்கை பொறியியலாளர் சேவை<br>(உ) இலங்கை விஞ்ஞான சேவை<br>(ஊ) இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | அரச நிர்வாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கு அமைவாக வருடாந்த இடமாற்றங்களை மேற்கொள்ளல் [258 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (258 மற்றும் 266 ஆகிய பிரிவுகள் இரண்டும் உள்ளடங்கலாக) ] |
| (எ) இலங்கை விவசாய சேவை | விவசாயம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஏ) இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஐ) இலங்கை நில அளவையாளர் சேவை | நில அளவை எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 4. நாடளாவிய சேவைகளில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளின் 127 மற்றும் 128 ஆகிய பிரிவுகளின் கீழ் தகுதிகூர் நிலைக் காலத்தை நீடிப்பதற்கு உட்படும் நிரந்தரமாக்கல்கள் தவிர, சேவையில் நிரந்தரமாக்கல்<br><br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு அமைய வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற் கான காலத்தை நீடித்தல்<br><br>iii. வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டு பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளின் 145 ஆம் பிரிவுக்கு அமைய கடிதங்களை வழங்குதல்<br><br>iv. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய தரம் II இற்கு அல்லது தரம் I இற்குப் பதவியுயர்த்தல்<br><br>v. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br><br>vi. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |
| 5. நாடளாவிய சேவைகளில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப் பட்டுள்ள பின்வரும் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள்<br><br>(அ) தரம் I இற்குக் குறைந்த தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br><br>(ஆ) III/II தரங்களைச் சேர்ந்த பதவிகளை வகிக்கும் தரம் I உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் /ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய தரம் III பதவிக்கு அல்லது III/II ஆம் தரங்களின் இணைந்த பதவிக்கு நியமித்தல் (நிலவும் வெற்றிடங்களுக்குத் தெரிவு முறையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் தவிர்த்து)<br><br>ii. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு தரம் III அல்லது தரம் II பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br><br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய பிரிவுகள் இரண்டும் உள்ளடங்கலாக) ] |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 6. நாடளாவிய சேவைகளில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட தரம் I பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் | ஏற்புடைய உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [258 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவான இடமாற்றங்கள் தவிர (258 மற்றும் 266 ஆகிய பிரிவுகள் இரண்டும் உள்ளடங்கலாக)] |
| 7. இணைந்த சேவையில் உள்ளடங்கும், 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/விசேட தர உத்தியோகத்தர்கள் | இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் | i. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு அதி உயர் தர/விசேட தர பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமித்தல்<br><br>ii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதி யின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக் கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br><br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)]<br><br>iv. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |
| 8. இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாகசுற்றறிக்கையில்(இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/ விசேட தர உத்தியோகத்தர்கள் (இலங்கை கிராம உத்தி யோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்தின் உத்தியோகத்தர்கள் தவிர்த்து) | ஏற்புடைய உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு அதிஉயர் தர/விசேட தர பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமித்தல்<br><br>ii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதி யின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br><br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)]<br><br>iv. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 9. இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் அதிஉயர் தரத்தின் உத்தியோகத்தர்கள் | உள்நாட்டலுவல்கள்ி/ அரச நிர்வாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு அதிஉயர் தர பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு நியமித்தல்<br>ii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)]<br>iv. ஓய்வூதியப் பிரமாணக்குறிப்பின் 17 ஆம் பிரிவின் கீழான ஓய்வு பெறுவித்தல்களுக்கு அங்கீகாரமளித்தல் |
| 10. இணைந்த சேவையில் உள்ளடங்கும் 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட மற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதி உயர் தரத்திற்கு/விசேட தரங்களுக்குக் குறைவான தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் (மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்கான பதவியுயர்வுகள் தவிர்த்து)<br>vi. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>viii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>ix. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>x. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>xi. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 11. அமைச்சொன்றின் கீழ் வரக் கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரங்களுக்குக் குறைவான தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் (இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தவிர்ந்த) | ஏற்புடைய உத்தியோகத்தர்கள் உள்ளடங்கும் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக் கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு பதவியுயர்த்தல் (மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்கான பதவியுயர்வுகள் தவிர்த்து)<br>vi. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>viii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>ix. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>x. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>xi. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 12. அமைச்சொன்றின் கீழ் வராத, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரங்களுக்குக் குறைவான தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் (பயிலுநர் நில அளவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள் தவிர) | ஏற்புடைய திணைக்களத் தலைவர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்/ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் (மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/விசேட தரத்திற்கான பதவியுயர்வுகள் தவிர்த்து)<br>vi. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>viii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>ix. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் |

| I ஆம் நிரல் உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல் கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | x. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல் (கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் திணைக்களம் சார்ந்த உத்தியோகத்தர்கள் தவிர்த்து)<br>xi. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| 13. இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் தரம் III, II மற்றும் தரம் I உத்தியோகத்தர்கள் | உள்நாட்டலுவல்கள்/ அரச நிர்வாகம் எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு அமைய தரம் II இற்கு அல்லது தரம் I இற்குப் பதவியுயர்த்தல்<br>vi. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>vii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>viii. பதவி நீக்கம்<br>ix. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக மாவட்டங்களுக்கு இடையே இடமாற்றம் செய்தல்<br>x. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| | ஏற்புடைய மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர் | i. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>ii. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு (பதவி நீக்கம் தவிர)<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவாக பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் இடமாற்றங்கள் செய்தல் (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக மாவட்டத்தினுள் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இடையே இடமாற்றம் செய்தல் |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | ஏற்புடைய பிரதேச செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாகப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் இடமாற்றம் செய்தல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)] |
| 14. கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் அதிஉயர் தரத்திற்கு/விசேட தரங்களுக்குக் குறைவான தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக மாவட்டங்களுக்கு இடையே இடமாற்றம் செய்தல்<br><br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவாக நிர்வாக மாவட்டங்களில் அமைந்துள்ள கமநல நிலையங்களுக்கு இடையே இடமாற்றம் செய்தல் (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)<br><br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு அமைவாக கமநல சேவை நிலையத்திற்குள் இடமாற்றம் செய்தல் (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) |
| | ஏற்புடைய நிர்வாக மாவட்டத்திற்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி பிரதி/உதவி ஆணையாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக நிர்வாக மாவட்டங்களில் அமைந்துள்ள கமநல நிலையங்களுக்கு இடையே இடமாற்றம் செய்தல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)]<br><br>ii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக கமநல சேவை நிலையத்திற்குள் இடமாற்றம் செய்தல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)] |
| 15.சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர்கள் வகிக்கும் பதவிகளுக்கு சமமான பதவிகளை வகிக்கும் சமுர்த்தி அபிவிருத்தி சட்டத்தின் 44(உ) (iv) இன் கீழ் உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் | சமுர்த்தி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 127 மற்றும் 128 ஆகிய பிரிவுகளின் கீழ் தகுதிகூர் நிலைக் காலத்தை நீடிப்பதற்கு உட்படும் நிரந்தரமாக்கல்கள் தவிர, சேவையில் நிரந்தரமாக்கல் |

| I ஆம் நிரல் உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல் கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | ii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு அமைய வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகளில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>iii. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய தரம் II இற்கு அல்லது தரம் I இற்குப் பதவியுயர்த்தல்<br>iv. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய தரம் III பதவிக்கு அல்லது III/II ஆம் தரங்களின் இணைந்த பதவிக்கு நியமித்தல் (நிலவும் வெற்றிடங்களுக்குத் தெரிவு முறையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் தவிர்த்து)<br>v. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு தரம் III அல்லது தரம் II பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு / கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vi. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவான இடமாற்றங்கள் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)]<br>viii. வயது பூர்த்தியாவதன் அடிப்படையில் சேவையை முடிவுறுத்தல் |
| 16. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் வரக்கூடிய, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதிஉயர் தர/ விசேட தர உத்தியோகத்தர்கள் வகிக்கும் பதவிகளுக்கு சமமான பதவிகளை வகிக்கும் சமுர்த்தி அபிவிருத்தி சட்டத்தின் 44(உ) (iv) இன் கீழ் உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் | சமுர்த்தி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | i. நிரந்தரப் பதவிக்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு அதிஉயர் தர/விசேட தர பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>ii. தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான மற்றும் தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வரக்கூடிய ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றங்களை மேற்கொள்ளல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)]<br>iv. வயது பூர்த்தியாவதன் அடிப்படையில் சேவையை முடிவுறுத்தல் |
| 17. சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தின் கீழ் வரக்கூடிய, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள<br>(அ) மூன்றாம் மட்ட அதிஉயர் தரம்/ விசேட தரம் தவிர்ந்த, மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள், மற்றும்<br>(ஆ) ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள்<br>வகிக்கும் பதவிகளுக்கு சமமான பதவிகளை வகிக்கும் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி சட்டத்தின் 44(உ) (iv) இன் கீழ் உள்ளீர்க்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி முகாமையாளர் கள் தவிர்த்து) | சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் | i. சேவையில் நிரந்தரமாக்கல்<br>ii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>iv. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் (மூன்றாம் மட்ட அதிஉயர் தரத்திற்கு/ விசேட தரத்திற்கான பதவியுயர்வுகள் தவிர்த்து)<br>v. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vi. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>vii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>viii. ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>ix. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>x. வயது பூர்த்தியாவதன் அடிப்படையில் சேவையை முடிவுறுத்தல் |
| 18. சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தின் சமுர்த்தி அபிவிருத்தி சட்டத்தின் 44(உ) (iv) இன் கீழ் உள்ளீர்க்கப்பட்டுள்ள பின்வரும் உத்தியோகத்தர்கள்<br>(அ) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்<br>(ஆ) சமுர்த்தி முகாமையாளர்கள் (விசேட தர சமுர்த்தி முகாமை யாளர்கள் தவிர்த்து) | சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் | i. சேவையில் நிரந்தரமாக்கல்<br>ii. நியமனத்தை முடிவுறுத்தல்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>iv. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் (சமுர்த்தி முகாமையாளர்களின் விசேட தரத்திற்கான பதவியுயர்வு தவிர்த்து)<br>v. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>vi. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல் |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | vii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்குஅமைவாக நிர்வாக மாவட்டங்களுக்கு இடையே இடமாற்றம் செய்தல்<br>viii. வயது பூர்த்தியாவதன் அடிப்படையில் சேவையை முடிவுறுத்தல் |
| | ஏற்புடைய மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) | i. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>ii. ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறைவிதிகளின் 263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) அமைவாக நிர்வாக மாவட்டத்திற்குள் இடமாற்றம் செய்தல் |
| | சமுர்த்தி மாவட்டப் பணிப்பாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக நிர்வாக மாவட்டத்தினுள் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இடையே இடமாற்றம் செய்தல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)] |
| | பிரதேச செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாகப் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் இடமாற்றம் செய்தல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)] |
| 19. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பின்வரும் உத்தியோகத்தர்கள்<br>(அ சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்<br>(ஆ) சமுர்த்தி முகாமையாளர்கள் விசேட தர சமுர்த்தி முகாமையாளர்கள் தவிர்த்து) | சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் | i. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை சேவையை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் (சமுர்த்தி முகாமையாளர்களின் விசேட தரத்திற்கான பதவியுயர்வு தவிர்த்து)<br>vi. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>vii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல் |

| I ஆம் நிரல்<br>உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல்<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | viii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக நிர்வாக மாவட்டங்களுக்கு இடையே இடமாற்றம் செய்தல்<br>ix. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |
| | ஏற்புடைய மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) | i. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>ii. ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>iii. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளின் 263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) அமைவாக நிர்வாக மாவட்டத்திற்குள் இடமாற்றம் செய்தல் |
| | சமுர்த்தி மாவட்டப் பணிப்பாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாகப் நிர்வாக மாவட்டத்திற்குள் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இடையே இடமாற்றம் செய்தல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)] |
| | பிரதேச செயலாளர் | i. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாகப் பிரதேச செயலாளர் பிரிவுக்குள் இடமாற்றம் செய்தல் [263 தொடக்கம் 266 வரையான பிரிவுகளுக்கு ஏற்புடைய இடமாற்றங்கள் தவிர (263 மற்றும் 266 ஆகிய இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக)] |
| 20. இணைந்த சேவையில் உள்ளடங்காத, 06/2006 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள இலங்கை இராணுவப் படையின் கடற்படையின் மற்றும் விமானப் படையின் சிவில் நிர்வாகத்தின் கீழ் வரக்கூடிய ஆரம்ப மட்ட மற்றும் இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்கள் | இலங்கை இராணுவப் படையின் கடற்படையின் மற்றும் விமானப் படையின் சிவில் நிர்வாகத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் | i. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய ஆட்சேர்ப்பு செய்தல்<br>ii. சேவையில் நிரந்தரமாக்கல்<br>iii. நியமனத்தை சேவையை முடிவுறுத்தல்<br>iv. பகிரங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள் பிரகாரம் வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியடைவதற்கான காலத்தை நீடித்தல்<br>v. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைய பதவியுயர்த்தல் |

| I ஆம் நிரல் உத்தியோகத்தர் வகுதி | II ஆம் நிரல் அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் | III ஆம் நிரல் கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | vi. பதவியொன்றில் பதிற் கடமையாற்றுவதற்கு/ கடமைகளை மேற்கொள்வதற்கு நியமித்தல்<br>vii. பகிரங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கு அமைவாக விடுவித்தல்<br>viii. அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்தலை அங்கீகரித்தல்<br>ix. ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம்<br>x. பகிரங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுக்கு அமைவாக இடமாற்றம் செய்தல்<br>xi. அனைத்து ஓய்வு பெறுவித்தல்களுக்கும் அங்கீகாரமளித்தல் |

**"ஈ அத்தியாயம்"**

**பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஏற்புடைய நடைமுறைவிதிகள்**

**அத்தியாயம் II**

**கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தல்**

12. தத்துவங்கள் கையளிக்கப்பட்ட ஏதாவது குழு அல்லது எவரேனும் உத்தியோகத்தர் அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தல் தொடர்பில் இவ்வாணைக்குழுவிற்குப் பொறுப்புடையதாகவும் பதில் கூறத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும்.

13. அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான ஆணைக்குழுவுக்குரிய தத்துவங்கள் ஏதேனும் ஒரு குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளவிடத்து குழுவின் அங்கத்தவர்களினால் அந்தத் தத்துவங்கள் கூட்டாகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

14. தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் மாத்திரமே அந்தக் கையளிக்கப்பட்ட தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். அத்தத்துவங்களை வேறு ஆளொருவருக்கு அல்லது ஒரு குழுவுக்குக் கையளித்தல் ஆகாது.

15. எவரேனும் ஒரு ஆள் அல்லது ஆட்களைக்கொண்ட ஒரு குழாத்தினால் அல்லது ஒரு குழுவினால் மேற்குறித்த 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறி மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளும் அல்லது எடுக்கப்படும் அனைத்துத் தீர்மானங்களும் செயல்வலுப்பெறாது. அத்தகைய செயலுக்கு அதிகாரமளித்த அல்லது வசதிகளை ஏற்படுத்திய தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரியும் அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்த ஆள் அல்லது குழு, அத்தகைய செயல் அல்லது தீர்மானத்தின் மூலம் உண்டாக்கப்படும் தீங்குக்கு அல்லது நட்டத்துக்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

16. தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரி அல்லது குழு தனக்குக் கையளிக்கப்பட்ட விடயப் பரப்பிற்குள் மற்றும் எல்லைகளுக்குள் அத்தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும். தத்துவம் கையளிக்கப்பட்ட விடயப் பரப்பிற்கு மற்றும் எல்லைகளுக்கு அப்பால் மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளும் அல்லது எடுக்கப்படும் அனைத்து தீர்மானங்களும் ஏதாவது விளைவையோ வலுவையோ கொண்டிருக்கமாட்டாது. அத்தகைய செயற்பாடுகளினால் அல்லது தீர்மானங்களினால் ஏற்படுத்தப்படும் ஏதாவது தீங்கிற்கு அல்லது இழப்பிற்கு தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரி அல்லது குழுவின் சகல அங்கத்தவர்களும் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாதல் வேண்டும்.

17. தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் அந்த தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற போது, ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுகின்ற நடைமுறை விதிகள், வழிகாட்டல்கள், நடவடிக்கை முறை மற்றும் ஒழுங்கு விதிகள் பிரகாரம் அன்றி பிற எவரேனும் ஆளொருவரின் அறிவுறுத்துரைகள் அல்லது செல்வாக்கு அல்லது கட்டளைகள் மீது தீர்மானங்களை எடுத்தல் அல்லது செயற்பாடுகளை மேற்கொள்ளுமிடத்து, அவ்வாறான தீர்மானங்களை எடுத்தல் அல்லது செயற்பாடுகளை மேற்கொள்ளல் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பிலான ஒழுக்காற்று நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்றாகக் கருதப்படும். அவ்வாறான தீர்மானங்கள் அல்லது செயற்பாடுகள் அனைத்தும் ஏதாவது விளைவையோ வலுவையோ கொண்டிருக்கமாட்டாது. அவ்வாறான தீர்மானங்களினால் அல்லது செயற்பாடுகளினால் ஏற்படுத்தப்படும் ஏதாவது தீங்கிற்கு அல்லது இழப்பிற்கு தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரி அல்லது குழுவாயின் அதன் அனைத்து உறுப்பினர்களும் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாதல் வேண்டும். ஆயினும், நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையின் அல்லது அரசியலமைப்பின் பிரகாரம் உரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றமொன்றினால் வழங்கப்படும் தீர்மானத்தின் மீது செயற்படுவதற்கு இப்பிரிவினால் எத்தகைய தடையும் ஏற்படாது.

18. தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் அத்தத்துவங்களை நடைமுறை விதிகள், வழிகாட்டல்கள், நடவடிக்கை முறை மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவும் பாரபட்சமின்றியும் நியாயமாகவும் சிறந்த விசுவாசத்துடனும் வெளிப்படைத்தன்மையுடனும்

பிரயோகித்தல் வேண்டும்.

19. தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரி தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்களைத் தளராத ஊக்கத்துடன் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தோடு தனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் ஏதாவது தாமதம் ஏற்படுமிடத்து அத்தகைய செயல் அந்த அதிகாரியினால் உடனடியாக ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

20. தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரி தேவை ஏற்படுமிடத்து ஆணைக்குழுவின் ஒத்துழைப்பையும் அறிவுறுத்துரைகளையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

21. இந்த நடைமுறை ஒழுங்கு விதிகளில் உள்ளடங்காத எந்தவொரு விடயம் அல்லது பொருள்கோடல் பற்றிய தீர்மானம் ஆணைக்குழுவினால் எடுக்கப்படல் வேண்டும்.

## அத்தியாயம் XX

### அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான இடாப்புக்களையும் அறிக்கைகளையும் தயாரித்தல்

288. தத்துவம் கையளிக்கப்பெற்ற அதிகாரி, நிருவாக அதிகாரி, திணைக்களத் தலைவர், நிறுவனத் தலைவர் ஒவ்வொருவரும் தனது விடயப் பரப்பிற்குள் தங்களுக்குக் கீழ் பணியாற்றுகின்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள் அனைத்தையும் கொண்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பின்னிணைப்புகளின் படியான பின்வரும் ஆவணங்களை கிரமமாக இற்றைப்படுத்தி பேணி வைத்திருத்தல் வேண்டும்.

| தொடரிலக்கம் | பின்னிணைப்பு | பேணி வைத்திருக்கப்பட வேண்டிய இடாப்புகள் |
|---|---|---|
| I. | 21 | அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமிப்புகள், பதவியுயர்வுகள் பற்றிய தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் பேணப்பட வேண்டிய இடாப்பு |
| II. | 22 | பதவிநீக்கம் செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் பேணப்பட வேண்டிய இடாப்பு |
| III. | 23 | பதவி விலகிய அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் பேணப்பட வேண்டிய இடாப்பு |
| IV. | 24 | பதவிகளை வெறிதாக்கம் செய்த அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் பேணப்பட வேண்டிய இடாப்பு |
| V. | 25 | பணித்தடை செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், கட்டாய லீவில் அனுப்பப்பட்ட உத்தியோகத்தர்கள் பற்றிய தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் பேணப்பட வேண்டிய இடாப்பு |
| VI. | 26 | ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் பேணப்பட வேண்டிய இடாப்பு |
| VII. | 27 | பொது வினைத்திறனின்மை அடிப்படையில் ஓய்வு பெறுவிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் பேணப்பட வேண்டிய இடாப்பு |
| VIII. | 28 | சேவை நீக்கத்திற்குப் பதிலாக கருணை அடிப்படையில் ஓய்வு பெறுவிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் பற்றிய தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் பேணப்பட வேண்டிய இடாப்பு |
| IX. | 29 | பதவியினர் மாற்றங்கள் பற்றி தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் அரையாண்டு அறிக்கை (அரசாங்க உத்தியோகத்தர்களின் புள்ளிவிபரத் தரவுகளை அரையாண்டுக்கு ஒரு முறை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடல்) |
| X. | 30 | ஒவ்வொரு அரசாங்க அலுவலகத்திலும் / நிறுவனத்திலும் பணிக்கமர்த்தப்பட்ட பதவியினர் பற்றி பேணப்பட வேண்டிய இடாப்பு |

289. தத்துவங்கள் கையளிக்கப்பட்ட அதிகாரி, திணைக்களத் தலைவர் அல்லது நிறுவனத் தலைவர் மேலே பிரிவு 288 இல் விபரிக்கப்பெற்ற இடாப்புகளில் பேணப்பட்ட தரவுகளின் புள்ளிவிபரங்களின் பொழிப்பு ஒன்றை தனது அமைச்சின் செயலாளருக்கு பின்னிணைப்பு 29 இன் மாதிரிப்படி வருடத்திற்கு இருமுறை அனுப்பி வைத்தல் வேண்டும். இதற்கிணங்க ஒவ்வொரு அமைச்சுக்களினதும் செயலாளர்கள் ஒவ்வொரு ஆண்டிலும் யூன் 30 ஆம் திகதி வரையிலான தரவுகளை யூலை 31 ஆம் திகதிக்கு முன்னரும் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான தரவுகளை சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னரும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

EOG - 12- 0189

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.